ஆஸாத்

AZAD

THE ONLY POLITICAL TAMIL FORTNIGHTLY
KUMBAKONAM

FOUNDER: HAJEE - M. ABDUR RAHMAN SAHIB

EDITOR: MAULANA ABDUL HAKEEM

22—5—50

பொருளடக்கம்.

இந்திய அரசியலின் புது சகாப்தம்

சில புத்திமதிகள்

சிறுபான்மைப் பாதுகாப்பு

ஹுமாயூனின் சிறந்த பண்பாடு

புத்தக விமர்சனம்

பாரதமும் — பாக்கிஸ்தானும்

செய்திகள்

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

60 YEARS NAME AND FAME

GURU

குழந்தைகளுக்கு
கைகண்ட மருந்துகள்

1. கஸ்தூரி மாத்திரை
2. கோரோஜனை மாத்திரை
3. ஹெல்த் மாத்திரை
4. பால் உப்பு
5. வேப்பெண்ணை தைலம்
6. குரு தைலம்
7. குரு பாலர் டானிக்
8. கக்குவான் மருந்து

குரு தைலம்
மகா சஞ்சீவி.

குரு மருந்துசாலை, : திருச்சிறுப்பள்ளி.

குரு பல்பொடி சகல தந்த ரோகங்கள் தீரும்.

நாங்கள் நவீன டிசைன்களில் ரிஸ்ட் வாட்சுகள், கிளாக்குகள், அலாரம் டைம்பீஸ்கள் ஏராள மாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உத்திரவாதத்துடனும் விலை மலிவாகவும் விற்பனை செய்கிறோம்.

ஜலால் & சன்ஸ்,

வாட்சு வியாபாரிகள் (கவர்மெண்ட் ரயில்வே சப்ளையர்கள்)
46, ராட்டன் பஜார், P. T. சென்னை.
பிராஞ்சுகள்:— மவுண்ட் ரோடு. சென்னை
அபித் ரோடு, ஹைதராபாத்.



பிரசித்தி பெற்ற

பிர்மா புகையிலையை

உபயோகியுங்கள்.

புரோப்ரைட்டர்:— A. N. இரத்தினம் & கோ.,
திருவாரூர்.

'AZAD' NATIONAL
TAMIL
BI - MONTHLY
KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய
மாதமிருமுறை பத்திரிகை
கும்பகோணம்.

மலர் 3 | விக்ருதி ஞு வைகாசி மீ 9௳ (22-5-1950) ஹிஜ்ரி 1368 ஷஃபான் மீ 4௳ திங்கட்கிழமை | இதழ் 4

இந்திய அரசியலின் புது சகாப்தம்.

இருபதாண்டுகளுக்கு முன் ஜனவரி 26உல் மஹாத்மா காந்தியின் தலைமையில் பூரண சுதந்தரம் பெற இந்திய மக்கள் செய்த பிரதிக்ஞை 26 ஜனவரி 50-ல் பூர்த்தியாயிற்று. இதனால் ஓர் புதிய சுதந்திர ஜனநாயக நாடு உலகத்தில் தோன்றியது. ஆசிய நாடுகளில் (ரஷியா தவிர) பரப்பிலும், ஜனத்தொகையில் சீனாவுக்கடுத்த ஸ்தானத்திலுள்ள பெரிய தேசம் இந்தியாவே. இதன் பூகோள அமைப்பு, அரசியல் அந்தஸ்து, கைத்தொழில் வசதிகள் முதலியவற்றைக் கருதும் போதில், சர்வ தேசங்கள் இதை ஒருக்காலும் புறக்கணித்துவிட முடியாது என்பது திண்ணம். 26 ஜனவரி 1950 சரித்திரம் கண்டறியாத புது இந்திய சகாப்தத்தின் ஆரம்ப தினமாகும். இப்பரந்தநாட்டை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரும் காரியத்தில் வெற்றியடைந்த மன்னர் ஒரு சிலரே எனலாம். வெற்றிகண்டவர்களின் சந்ததியார் இப்பரந்த நாட்டை ஆள முடியாது திணறியிருக்கிறார்கள். அந்நிய படையெடுப்பாளரை எதிர்த்து ஐக்கிய அணியை நிர்மாணிப்பதில் தவறிய பல உதாரணங்கள் சரித்திரத்தில் காணக்கிடக்கின்றன. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாய் பல சிறு நாடுகளாய் சிதறிக் கிடந்த இந்தியநாடு அந்நியரால் பலமுறை தோற்கடிக்கப்பட்டுள்ளது. இந்தியரின் வேறுபாடுகளை பயன்படுத்தியே ஆங்கிலேயரும் இந்நாட்டில் ஏகாதிபத்தியத்தை ஸ்திரமாக்கினார்கள். ஆயினும் பிரிட்டிஷ் முதலாளிகள் சிருஷ்டித்த இந்தியநாட்டில் ஏகாதிபத்தியத்தை தொலைக்கக்கூடிய விஷக் கிருமிகளும் நிறைந்திருந்தன. ஆங்கில முதலாளித்துவ விஷக் கிருமிகள் முடிவில் 25 ஜனவரி 50-ல் ஏகாதிபத்தியத்தை சவக்குழியில் புதைத்துவிட்டன. ஆகவே வயதுவந்த இந்தியர் ஒவ்வொருவருக்கும் தன் தாய்நாட்டின் கதியை நிர்ணயிக்கும் உரிமையை அளிக்கும் புனித சகாப்தம் அன்று ஆரம்பமாகிவிட்டது.

இந்தியாவைப் போன்ற பரந்த தேசத்தின் அரசியல் நிர்ணய காரியம் சுலபமானதல்ல. இந்நாட்டின் ஒரு மாகாணம் உத்திரபிரதேசம் இங்கிலாந்தளவு கொண்டதாகும்; உ. பிரதேசத்தின் ஓர் டிவிஷன் ஜான்ஸி மட்டிலும் ஹாலண்டின் விஸ்தீரணம் கொண்டதாகும்; இந்நாட்டில் இலக்கண வசதியுள்ள எழு பாஷைகள் பேசப்படுகின்றன. பல்வேறு வகுப்பார், மதத்தாரையும் மனதிலிருத்திக் கொண்டாலும் அரசியல் நிர்ணயம் எவ்வளவு கடுமையான காரியம் என்பதை ஒருவாறு ஊகிக்க முடியும். வெறும் அரசியல் நிர்ணயம் மட்டிலும், நிர்ணய சபையாரைச் சேர்ந்துவிடவில்லை. மதம், ஜாதி, மொழி முதலியவற்றின் காரணமாய் எவருக்கும் அநீதி ஏற்படா வண்ணம் பாதுகாப்பளிக்கும் அரசியலை நிர்ணயம் செய்யும் கடுமையான கடமை ஏற்பட்டது. இவ்வடிப்படைப் பிரச்னையின் கடுமையை அறிந்துகொண்டபின், நம் அரசியல் நிர்ணய சபையாருக்கு பூரண வெற்றி கிடைத்தது என்பதை நிச்சயமாய்க் கூறமுடியும். ஆகவே அரசியல் சட்டம் அமுலாக்கப்பட்டபின், ஜாதி; வகுப்பு, மதம், மொழி காரணமாக வெறுக்கும் அநீதி ஏற்பட முடியாது. ஒருவேளை ஏற்பட்டுவிட்டால் பரிகாரம் தேட தகுந்த முறைகள் நிர்ணயமாகியுள்ளன. இதுதான் இந்திய அரசியலில் உள்ள சிறந்த அம்சம். கடந்தகாலத்தில், நாம் இந்தியமுன்னேற்றம் அதன் ஐக்கியத்திலேயே உண்டு என்ற பாடத்தைக் கற்றுள்ளோம் என்பதே இச் சிறந்த அம்சம் அமைக்கப்பட காரணமாகும்.

குடியாசு அரசியலைநிர்ணயிக்கையில் ஆங்கிலேய இந்திய அரசியல் சட்டங்களைப் புறக்கணித்து விடாமல் அதன் சிறந்த அம்சங்களை எடுத்துக் கொண்டு ஜனநாயகத்துறையில் நாட்டை முன்னேற்றக் கூடிய வகையில் சட்டங்கள் நிர்ணயமாகியுள்ளன. அரசியல் சட்டத்தில் 1935 சட்டத்தின் சிறந்த அம்சங்கள் பலவற்றைக் காணலாம். ஆனால் அந்நிய நாடுகளின் அரசியல் சட்டங்களை ஆராய்ந்து அமுலாக்கப்படுகையில் எவ்விதகஷ்டமும் ஏற்படாதவகையில் தீர்க்கமாய் ஆராயப்பட்டிருக்கின்றன. அரசியல் நிர்ணய சபையார் மிக்க கஷ்டத்தோடு அரசியலை நிர்ணயம் செய்யினும் சட்டம் அமுலாக்கப்பட்டபின் காலப்போக்கில் அவர்கள் எவ்வித வெற்றியடைந்துள்ளனர் என்பதையும், இதனால் முப்பத்து மூன்றுகோடி மக்களின்

உரிமைகள் பாதுகாக்கப்படுமா, நோக்கங்களில் வெற்றிகாண முடியுமா, என்பதையும் கூறமுடியும். ஆகவே அரசியல் சட்டத்தின் சிறந்த அம்சங்களை ஆராயவேண்டியது முக்கியமாகும்.

(1) அரசியல் சட்டப்பிரகாரம் இந்தியா ஒரு பூரண சுதந்தரகுடியரசாகும். இது பல இராஜ்ஜியங்களின் யூனியன். இதில் 28 ராஜ்யங்களும் அந்தமான் நிகோபார் தீவுகளும் சேர்ந்துள்ளன. இவ்வரசியல் ஒரு சமஷ்டிச் சட்டமாகும். சட்டப்பிரகாரம் எந்த ராஜ்யமும் பிரிந்துபோகவோ தனி அரசியலை நிர்ணயித்துக்கொள்ளவோ முடியாது; இவ்விதம் இந்திய ஐக்கியத்தை ஸ்திரமாக்க மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் சக்தி ஊட்டப்பட்டிருக்கிறது அரசியல் சட்டத்தை வியாக்யானிக்கும் முடிவு அதிகாரம் ஸ்தலத்துக்கே உண்டு. பார்லிமெண்டு தடை செய்யும் வரை நீடிக்கக்கூடிய சட்டங்களை விதிக்கும் அதிகாரமும் (ஆஸ்திரேலியாவில் உள்ளதுபோல்) அரசியல் சட்டம் அளிக்கிறது. இதைத்தவிர 47-விஷயங்களில் சட்டத்தை மாற்றியமைக்கும் உரிமை பார்லிமெண்டுக்கு உண்டு. இவ்வுரிமை சர்வதேசங்களில் உள்ளதைவிட அதிகமாகும். ஆகவே அரசியல் திட்டம் வளைந்து கொடுக்கக்கூடியதாயினும் பிற்போக்கை அநுமதிக்கக்கூடியதல்ல. சாதாரணமாய் சமஷ்டி முறையிலும் யுத்தம்போன்ற அவசர காலங்களில் ஒரே தேசமாய் பணியாற்றவும் அரசியல் சட்டம் அனுமதிக்கிறது.

(2) சட்டப்படி இந்திய ராஜ்ஜியத்தின் அதிபர் ராஷ்டிரபதியே ஆயினும், அவர் அமெரிக்க தலைவரைப் போலன்றி, மந்திரிசபையின் ஆலோசனையின்படியே ஆட்சிசெலுத்துவார். மந்திரிகள் பார்லிமெண்டிற்கு கட்டுப்பட்டவர்கள்; இவ்விதம் சமஷ்டி முறையும். பார்லிமெண்டரி முறையும் ஒன்றுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சமஷ்டி முறை சில சந்தர்ப்பங்களில், பார்லிமெண்டுக்கு எதிராக நடக்கவும் தலைவருக்கு உரிமை அளிக்கிறது. இதற்கு நேர்மாறாக பிரிட்டிஷ் பிரதமர் பொதுஜன சட்டசபையின் அதிகாரத்திற்குட்பட்டவராவர். இந்திய தலைவர், பார்லிமெண்டரி குடியரசின் தலைவராயிருப்பினும் தனிப்பட்ட அதிகாரம் கிடையாது. இச் சிறந்த அம்சம் எந்த நாட்டின் அரசியலிலும் காணமுடியாது.

(3) அரசியல் அடிப்படை உரிமைகளில்முக்கியமானவை :— சமத்துவம், சுதந்தரம், மதம், கல்வி, கலாச்சாரம், சொத்து நியாயம், முதலிய உரிமைகள் இந்தியர் அனைவருக்கும் ஒரேவிதமானவை கீழ்கண்ட ஷரத்துக்களுக் குட்பட்ட யாவரும் இந்திய பிரஜைகளென மதிக்கப்படுவர்.

(அ) அவனோ அல்லது அவனுடைய பெற்றோரில் ஒருவரோ இந்தியாவில் பிறந்தவரா யிருக்க வேண்டும். (ஆ) சட்டம் அமுலாக்கப்படுமுன் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளாவது இந்தியாவில் வசித்தவராயிருக்கவேண்டும். பாகிஸ்தானினின்றும் வந்தவர்களுக்கு தனி ஷரத்துக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்டவரின் உரிமை பாதுகாப்பை அரசியல் சட்டம் குறிப்பிடுகிறது. அதன்படி “சட்டப்படியன்றி எந்த மனிதனும் கைது செய்யப்படவோ; காலவரையறையின்றி காவலில் வைக்கப்படவோ முடியாது. கிரயமோ, பதிலோ அளிக்காமல் எவருடைய சொத்தையும் ஆக்கிரமிக்கும் அதிகாரம் சர்க்காருக்குக்கிடையாது. மற்ற ஜனநாயக நாடுகளில் மக்களுக்குள்ள எல்லா உரிமைகளும் இந்திய பிரஜைகளுக்கும் உண்டு. ரஷ்யாவைபோல் தனிப்பட்டவரின் சுதந்திரத்தை இந்திய அரசியல் பறிக்க விரும்பவில்லை.

(4) ராஜாங்க அதிகார பிரிவினை சமஷ்டி அரசியலின் முக்கிய அம்சமாகும். ஏனெனில் சட்டப்படி சமஷ்டி அரசாங்கம், ராஜ்யங்களின் அரசாங்கத்தில் தலையிடுவதும், அல்லது ராஜ்யங்களின் சமஷ்டியில் தலையிடுவதும், சட்டத்திற்கு எதிரான நடவடிக்கை. ஒரு சட்டத்தின் கருத்தை வியாக்கியானம் பெற நியாயஸ்தலங்களின் தீர்ப்பு கோரப்படும். இந்திய அரசியல் ராஜ்யங்களுக்கும், சமஷ்டிக்கும் இடையே முரண்பாடுஉண்டாகாதவாறு தயாரிக்கப்பட்டுள்ளது. முக்கியமான இவ்விஷயத்தினல் அரசியல் சட்டத்தொகுப்பு மூன்று பட்டியல்களாய் பிரிக்கப்பட்டுள்ளது யூனியன் பட்டியலில் கூறப்பட்டுள்ள விஷயங்களுக்கு பார்லிமெண்டும், ராஜ்ஜியபட்டியலில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு ராஜ்ய சட்டசபையும், பொதுவிஷயங்களில் பார்லிமெண்டும், மாகாணசட்டசபையும் தேர்ந்தெடுக்கும் நிர்ணயசபையும், சட்டங்களை இயற்றும் இத்துறையில இருவிதசந்தர்ப்பங்கள் ஏற்படக்கூடும். நாட்டில் ஏற்படும் சுகாதாரநிலைமையால் ராஜ்யங்களும் மத்திய சமஷ்டியும் ஒரேவித சட்டங்களை நிறைவேற்றியவேண்டிய அவசியம் ஏற்படலாம். அல்லது ராஜ்யங்கள் நிறைவேற்றும் சட்டங்கள் சமஷ்டி அரசியலுக்கு முரண்பாடுள்ளனவாயிருக்கமுடியும். இந்திய அரசியல் நிர்ணயத்தின் இவ்வித சந்தர்ப்பங்கள் புறக்கணிக்கப்படவில்லையாதலால் இவ்வபாயத்தை தடுக்க இரு முறைகள் கையாளப்பட வழிசெய்யப்பட்டுள்ளது (1) ராஜ்யசட்டசபையின் மூன்றில் இரண்டுபாக அங்கத்தினர்கள், ஒரு விஷயத்தை சமஷ்டிசர்க்கார் தீர்மானிக்கவேண்டும் என்று தீர்மானித்தாலன்றி, ராஜீய சட்டங்களுக்கு முரணான சட்டங்களை சமஷ்டி சாக்கார் நிறைவேற்றலாகாது. (2) ஒரு ராஜ்யத்தின் சட்டங்களில் ஒன்று சமஷ்டி சர்க்காரின் சட்டத்திற்கு முரண்பட்டதாயின், முரண்பட்ட

அளவுக்கு அச்சட்டம் செல்லத்தக்கதல்ல, சமஷ்டி சட்டமே செல்லத்தக்கதாகும். அதாவது பார்லிமெண்டு சட்டத்தை எதிர்க்கும் பாகங்கள் செல்லுபடியாகாது.

(5) இந்திய பார்லிமெண்டில் இரு சபைகளிலிருக்கும்.

(அ) ராஜ்யங்களின் சமஷ்டிசபை (Council of States) (ஆ) பொதுச்சபை.

சமஷ்டி சபையில் 250-ம் பொதுச் சபையில் 500 அங்கத்தினரும் இருப்பர். சமஷ்டி சபை அங்கத்தினர்கள் நேரடியாகப் பொது ஜனங்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் அல்ல. ஆனால் பொதுச்சபையினர் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். பார்லிமெண்டு சபைகளின் கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திப்போடவும் தலைவர்களுக்கு அதிகாரம் உண்டு. பட்ஜெட்டைத்தவிர மற்ற எந்த சட்டமும் எந்த சபையிலும் முதலாவதாக சமர்ப்பிக்கபடலாம்.

(6) சமஷ்டி அரசாங்கத்தில் நியாய விசாரணைக்கு முக்யத்துவம் அளிக்கப்படுகிறது. ஏனெனில் ஆட்சியின் சகல பிரிவுகளையும் கட்டுப்படுத்தக்கூடிய நீதி சபையேயாகும். சுப்ரீம்கோர்டை தலைமைஸ்தாபனமாய்க் கொண்ட எல்லா நியாய விசாரணைஸ்தலங்களும் ஒரே கோர்வையானவை. சுப்ரீம் கோர்ட்டு அதிகாரத்தின்கீழ் ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு ஹைகோர்ட்டும், அதன்கீழ் பல சிறுகோர்ட்டுகளும் இருக்கும். நியாய விசாரணை இந்திய சமஷ்டி அனைத்திற்கும் ஒரேவிதமாயிருக்கும்.

இந்திய அரசியலின் மேற்கூறிய சிறந்த அம்சங்களை கவனித்தால் அதன் பல நன்மைகள் புலனாகும். ஆயினும் அச்சிறப்புகளுடன் சில தவறுகளும் உள்ளன. வருங்காலத்தில் இன்று சாதாரணக்குறையாய் தோன்றுபவை நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவும்கூடும். ஆகவே புதிய அரசியலில் உள்ள சில கெடுதல்களையும் இந்திய மக்கள் அறிந்துகொள்வது நலம் ஏனெனில் இந்நாட்டின் முடிசூடா மன்னர்களான பொதுமக்கள் தங்கள் விதியை நிர்ணயிக்குமுன் தாங்கள் செய்ய நினைக்கும் காரியத்தைப் பற்பல முறைகளிலும ஆராய்ந்து, பலாபலன்களை அறிந்து, வருங்காலத்தில் இதனால் எவ்வித நலன்களும், கெடுதல்களும் சம்பவிக்கபோகின்றன என்பதை அறிந்துகொண்டால், காரியம் சரிவர நடக்க மார்க்கம் தோன்றும்

எந்த விஷயத்தில் அபாயம் ?

இந்நாட்டு சரித்திரத்தில் முதல் குடியரசு இன்றுதான் ஆரம்பமாகியுள்ளது, கடந்த காலத்தில் கிராமப் பஞ்சாயத்துகளின் மூலம் குடியரசு நடைபெற்று வந்ததாயினும் மேல்நாட்டு பார்லிமெண்டரி ஜனநாயகம் இந்நாட்டிற்கு புதியதாகும். ஏகாதிபத்தியம் சர்வாதிகாரம் ஆட்சிமுறையில் உள்ள பெருங்குறை. அவற்றால் பொதுமக்களின் சிந்தனசக்தி அடியோடு பாழாகிவிடுவதே தன் நம்பிக்கை பெயருக்கும் காணமுடியாது அவர்கள் மற்யவரைக் குறை கூறும் வழக்கத்தை மேற்கொள்ளுகின்றனர். இந்திய மக்கள் அரசியலுக்கும் இதே ஆபத்து உள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் நம் சுகதுக்கம் அனைத்திற்கும் வெள்ளைக்கார வீரர்களின் தயவை எதிர்பார்த்திருந்தோம். இன்னும் அதே நிலைமையிலுள்ளோம். கண்வலி ஏற்பட்டாலும் சர்க்காரைக் குறைகூற ஆரம்பித்து விடுகிறோம் ஆனால் குடியரசில் பொதுமக்களின் அரசியல் விழிப்பே தலைவர்களை முன்னேற்ற கூடியது. ஒரு காரியத்தை மேற்கொள்ளுமுன் தலைவர்கள் பொதுஜன அபிப்பிராயத்தை கருத்தில் கொள்கின்றனர். ஆகவே தலைவர்களை உஷாராய் கண்காணிக்கும் பொருப்பு மக்களைச்சேர்ந்தத்த தலைவர்கள் தவறு செய்தால். அவசியமானால் அவர்களைக் காதைத்திருகி நல்வழிப்படுத்துவது மக்களின் கடமையாகும். ரஷ்ய சர்வாதிகாரம் மேற்கத்திய ஜனநாயகம் போன்ற ஆட்சிகளிலேயும் இதைப்போன்ற வித்தியாசமே உள்ளது. ரஷ்யாவில் எல்லா கொள்கைகள், திட்டங்கள், யாவையும் சர்க்கார் தயாரிக்கிறது பொதுமக்கள் அவற்றிற்குக்கீழ் படியவேண்டியது தவிர, சிறிதளவும் விரோதமாக நடந்தால் கடுமையான தண்டனைக்குட்படுவார்கள் இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளில் அவ்விதமில்லை இந்திய அரசியல் மேற்கத்திய ஜனநாயக முறையைப் போன்றதே ஆகவே அதன் வெற்றிக்கு, பொதுஜன விழிப்பு அவசியம். கடந்தகால அரசியல் நித்திரையை விடடொழிக்கவேண்டும். நவீன முறையில் சிந்திக்கும் ஆற்றல் ஏற்படவேண்டும். ஜனநாயகமுறைக்கு இருபெரும அபாயங்கள் நேரக்கூடும்.

(1) சர்க்காரை நடத்தும் ஒரு கூட்டத்தார் தங்கள பலத்தைப்பெருக்கி, நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றி ராணுவ உதவியுடன் ஜனநாயகத்தை பாழாக்கிவிடக்கூடும். கடந்த பத்து மாதத்திற்குள் சிரியாவில் ஏற்பட்ட மூன்று மாறுதல்கள் இவ்வித அபாயத்திற்கு உதாரணமாகும். ராணுவத்தைத்தன் ஆதிக்கத்தில் கொண்ட தலைவர் உடனே நாட்டின் நிர்வாகத்தை கைப்பற்றிவிட முடியும். சில நாட்களுக்குமுன் அரசியல் நிபுணர் மிஸ்டர் ஷாந்தி சரூப் இந்தியாவக்கு இவ்வித ஆபத்து ஏற்படக் கூடும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். "பொது மக்களிடம் செல்வாக்குள்ள இரு தலைவர்களே இந்தியாவில் உள்ளனர் சர்க்கார உத்தியோகஸ்தரின் அபிமானமும் அவர்களுக்கு உண்டு பண்டித நேரு, சர்தார் படேல் இருவரைத் தவிற மற்ற எந்த தலைவருக்கும் இவ்வந்தஸ்து இல்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பொதுவாக மந்திரிகளின் தகுதியற்ற நிலைமையைக் கூறி ஏளனம் செய்கின்றனர். இந்நிலைமை இந்திய

குடியரசுக்கு வெறும் ஆபத்தாய் முடியும். ஏனெனில் ராணுவத் தலைவர்களின் சர்வாதிகார அபாயம் எந்த நிமிஷமும் இந்தியாவில் ஏற்படுவது சுலபம். தேசிய தலைவர்களுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் உதவியால் நாட்டைக் கைப்பற்றிக் கொள்வது கடினமல்ல" என்று அவர் எச்சரித்திருக்கிறார். ஆயினும் இந்திய ராணுவம் தேசிய மனப்பான்மை கொண்டிருப்பதும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தாய்நாட்டிற்கு துரோகம் செய்ய நினைக்கமாட்டார்கள் என்று நிச்சயமாய் தெரிவித்தாலும் கவலை கொள்ள இடமில்லாமல் செய்துவிட்டது.

இவற்றைத் தவிர உள்நாட்டில் வதியும் பல பிற்போக்கு சக்திகளால் வருங்காலத்தில் ஜனநாயக ஆட்சிக்கு அபாயம் ஏற்படலாம் என்றபயம் ஏற்படுகிறது; அவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து ஆலோசியாமல் இருப்பது அபாயகரமானதாகும். மிதவாதமே ஜனநாயகம் வெற்றிபெறச் செய்வதாகும். தீவிரவாதம் ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல. ஏனெனில் தீவிரவாதிகள் தவறான உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, நேர்மையான சிறுபான்மையினரின் அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளாமலும், சமயம் ஏற்பட்டால் அவர்களை நசுக்கவும் முற்படுவர். உணர்ச்சியினில் சிக்கியவன் அறிவு இழப்பது நிச்சயம். சுயநல வாதிகளின் பித்தலாட்டங்களால் ஏமாற்றமடைந்த மக்கள், தங்கள் முன்னேற்றத்தை நாசமடையச் செய்யும் தவறான போக்கை மேற்கொண்ட உதாரணங்களுக்கு சரித்திரத்தில் குறைவில்லை. உதாரணமாக ஜர்மனி, இத்தாலியையே பார்ப்போம். பொதுமக்கள் சர்வாதிகாரிகளின் பசப்பு வார்த்தைகளுக்காளாகி, இன்று அச் சர்வாதிகாரிகளின் செய்த தவறுகளின் பயனைப் பெறும் ஆபத்தில் சிக்கித் தவிப்பதை நாம் அறிவோம். பொது ஜனங்கள் என்றும் குற்றமற்றவர்கள் என்கிறார் ஓர் அறிஞர். பழிபாவங்களுக்கு காரணபூதர்கள் தலைவர்களே. ஆனால் தலைவர்களின் தவறுகளுக்கு தண்டனை சமுதாயமே ஏற்கவேண்டியதாகிறது. இந்தியாவுக்கும் இவ்வித ஆபத்து ஏற்படக்கூடும். ஏனெனில் நம் நாட்டில் பெரும்பான்மையினர் கல்வியறிவற்றவர்களே. வயது வந்தோர் அடிப்படையிலன்றி குறுகிய அளவில் ஓட்டுரிமை இருந்த சமயத்தில், பாமரமக்கள் காந்தித்தாத்தா திருநாமத்திற்கும் இஸ்லாமுக்கும் ஓட்டளித்து வந்தனர். இன்று வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. ஆகவே சுயநலவாதிகளின் பசப்பு வார்த்தைகளுக்காளாகி, உதவாக்கரைகளை தேர்ந்தெடுத்துவிடுவர் என்ற அச்சம் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. நம் நாட்டில் அரசியல் வேறுபாடுகளுக்கு இரு முக்கிய அடிப்படைக் காரணங்களுள்ளன. ஒன்று முதலாளித்துவ எதிர்ப்பு மனப்பான்மை மற்றொன்று வகுப்பு வாதமாகும். இந்திய அரசியல் துறைகள் அனைத்திலும் இவ்விரு சக்திகள் காணப்படுவதை அறியலாம். பற்பல அரசியல் ஸ்தாபனங்களும் இவ்விரு காரணங்களாலேயே செல்வாக்கடைந்து வருகின்றன. தேசியம், வகுப்புவாதம் என்ற விஷயத்தில் ஒரு சில தலைவர்களைத்தவிர மற்றவர்கள் அனைவரும் வகுப்புவாதமனப்பான்மைக்கு இரையாகியிருப்பதைக் காணலாம். காங்கிரஸ்காரர்களில் பலர் ஆர். எஸ். எஸ்ஸிடம் அனுதாபமுள்ளவராயும், சோஷலிஸ்டுக்களில் பலரும் பழைய முஸ்லிம் லீகர்களும் மாஜீ ஹிந்துமஹா சபைக்காரராயும் உள்ளனர். சோஷலிஸ்டுக்களின் வளரும் சக்தியைக் கண்டு வகுப்புவாதத்தை விட்டு சோஷலிஸ்டு வேஷம் போட்டுள்ளனர். பொதுவுடமைக்கும் முதலாளித்துவத்துக்கும் உள்ள பாகுபாட்டை கவனித்தால், வெடிகுண்டுவீச்சு, கொலை, கொள்ளை முதலிய பயங்கர முறைகளால் சோஷலிஸத்தை ஸ்தாபிக்க நினைக்கின்றனர் கம்யூனிஸ்டுகள். பயங்கர முறைகளை விட்டுவிட்டால் கட்சிகள் அனைத்தும், பொதுவுடமைக் கொள்கையை சிலாகிப்பதைக் காணலாம். ஆயினும் சோஷலிஸம் எவ்விதம் ஸ்தாபிதமாகும்? அது இந்தியாவின் அடிப்படைப்பிரச்னைகளுக்கு பரிகாரமாகுமா? ஒரு சிலரோ இதற்கு ஒருவாறு பதிலளிக்கக்கூடும். இந்தியாவின் சிக்கலான அரசியல் நிலைமையை நன்கு ஆராய்ந்தபின் இந்நாட்டில் ஜனநாயக வெற்றி பொது ஜனங்கள் ஒத்துழைப்புடனேயே கிடைக்கக்கூடும் என்ற முடிவுக்கே வர முடிகிறது. ஆகவே குடியே குடியரசின் வெற்றி தோல்விகளுக்கு பொறுப்பு மக்களேயன்றி தலைவர்களும், சர்க்காருமல்ல என்பது நிச்சயம்.

புது அரசியலும் அதன் எதிரிகளும்

இந்திய அரசியல் ஆராய்ச்சியில் பல எதிர் கட்சியினர் செய்யும் கண்டனங்களையும், கூறும் குறைகளையும், ஆலோசியாமலிருப்பதற்கில்லை. குறை கூறுபவர்கள் அனைவரும் அரசியல் திட்டம் தம் தம் கட்சிகளின் லட்சியங்களுக்கு ஏற்றவாறிருக்கவேண்டுமென விரும்புகின்றனர். ஹிந்துமகாசபை, ஹிந்துராஜ்ய திட்டமும், கம்யூனிஸ்டுகள் ரஷிய ஆட்சி முறையையும் விரும்புகையில் சோஷலிஸ்டுகள் புது அரசியல் திட்டத்துடன் தங்களுக்கு எவ்விதசம்பந்தமுமில்லை என்று கூறுகின்றனர். ஆயினும் அநேகர் குறுகியபோக்கின் காரணமாகவே குறைகூறுகின்றனர். அடிப்படைப் பிரச்னையை ஆராயும்போதிலும், கட்சி மனப்பான்மையைவிட பலர் விரும்பவில்லை போல் தோன்றுகிறது. ஆயினும் ஒரு விஷயம் மட்டும் கவனிக்காமல் விட்டுவிடுவதற்கில்லை. அதாவது பொருளாதார ஏற்றத்தாழ்வை விரட்டியடிக்க புது அரசியல் நேர்மையான முறையை சிபார்சு செய்யவில்லை என்பதே வருங்கால இந்திய அரசியலின் ஜீவாதாரமானபிரச்னை. பொருளாதாரப் பிரச்னையே. ஆகவே இப்பிரச்னையை தீர்க்க பொதுமக்கள் ஆதரவு பெற்ற ஒரு கட்சி அரசியல்

திட்டத்தில் ஒரு சிறு மாறுதலைச் செய்து விட்டால் அது நேர்மையான காரியமாகும்.

பொதுமக்கள் கடமை ?

மேற்கூறியவற்றை கருத்தில்கொண்டு, புது அரசியல் திட்டம் 33 கோடி இந்திய மக்களின் சுபிட்சத்திற்கும், முன்னேற்றத்திற்கும் எவ்விதம் உதவிசெய்யக்கூடும், என்ற விததில் ஆராய்வதே நேர்மையாகும் என்பதே நோக்கம் இத்திட்டத்தை திருத்தியமைக்க பொதுமக்களுக்கு பூரண அதிகாரமுண்டு. அவர்களே இந்நாட்டு முடிசூடாமன்னர்கள். ஆகவே தங்கள் முன்னேற்றத்திற்கு வற்றவாறு அரசியல்திட்டத்தை கிரியாம்சையில் நிறைவேற்றும் பொருப்பும் அவர்களுடையதாகும். அரசியல் நிர்ணய சபையார் தங்கள் கடமையை நியாயமுடனும், மனச்சாட்சிக்கு ஏற்றவாறும் நிறைவேற்றிவிட்டனர். இப்பொழுது தங்கள் நலனுக்குகந்த முறையில் அதைப் பின் பற்றுவது மக்களின் கடமையாகும். முன்னேற்றத்தைத் தடைசெய்யும் எந்த சட்டத்தையும் திட்டத்தினின்றும் களைந்தெரியும் அதிகாரம் அவர்களுக்கு உண்டு. 26 ஜனவரி 1950 லின்றும் இந்தியா சரித்திரத்தின் புது ஆரம்பமாகிவிட்டது வருங்கால சரித்திர சிருஷ்டி கர்த்தாக்கள் நாமே. ஆகவே எவ்வித சரித்திரத்தை எழுதப்போகிறோம்" என்று தீர்மானிக்க வேண்டியது நம் கடனே தளரா உறுதி, தடமாற்ற மடையாசித்தம், அன்பு, நிரந்தர செயல் முதலிய உன்னத லட்சியங்களே, வாழ்க்கைப்போராட்டத்தில் வெற்றியளிக்கக் கூடிய சாதனங்களாகும்.

ஜெய்ஹிந்த், ஜய்பாரத், மகாத்மா காந்தி லட்சியம் வாழ்க !

சில புத்திமதிகள்.

—(நாமக்கல் P. மஹம்மத் உஸ்மான்)—

உலகம் இன்று இருக்கும் நிலைமையில் இந்தியா தேசத்தின் நண்பர்களும் உண்மையில் நண்பர்களாக இல்லை என்பதை இந்திய மக்கள் நன்றாக அறியவேண்டும். எவ்வளவு சமயங்களில் பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் தர்ம நியாயமான காரியங்களிலும் இந்தியாவை உலக கௌன்சில் விவகாரங்களில் கைவிட்டு விட்டார்கள் என்பது உலகமறிந்த விஷயம். ஆகையால் நியாயமோ, தர்மமோ, சத்தியமோ, அஹிம்சையோ உலகத்திற்கு நாம் போதிக்கவேண்டுமானாலும் அல்லது நாம் கடைபிடிக்க வேண்டுமானாலும் இந்தியாவை உலக அரங்கத்தில் மிகவும் பலமுள்ளதாகச் செய்யவேண்டியது ஒவ்வொரு இந்தியனின் கடமையாகும்.

நம்முடைய தேசமும் காங்கிரஸ் கவர்மெண்டும் பலமடைவதற்கு முதலாவதாக வகுப்பு ஒற்றுமை நிலவ வேண்டும் தமிழ்நாட்டை பொருத்தவரையில் வகுப்பு கலவரங்களோ மற்றவைகளோ இவ்விடம் கிடையாது. இல்லாதபோதிலும், இந்தியா பாகிஸ்தான் உடன்படிக்கையை மனம், வாக்கு, காயம் இவைகளால் நாம் எல்லோரும் ஆதரித்து நிற்கவேண்டும் தமிழ்நாட்டு முஸ்லிம்களும் சரி இந்திய முஸ்லிம்களும் சரி இந்நாட்டில் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து இவ்விடமே மடியக்கூடியவர்களென்பதை ஒருநாளும் மறந்துவிடக்கூடாது. அதேபோல் இங்கிருந்து குடிபெயர்ந்து பாகிஸ்தானில் வாழவும் முடியாது. இந்தியாவில் எல்லா சிறுபான்மையோரும் நன்றாக பாதுகாக்கப்பட்டு வருகிறார்களென்பதை யாரும் மறுக்க முடியாது அதுவும் விசேஷமாக முஸ்லிம்கள், அந்நிய அரசாங்கம், அது முஸ்லிமாக இருந்தாலும் சரி வேறு எவ்விதமாக இருந்தாலும் சரி நமக்கு ஒருவித உதவியும் செய்துவிட முடியாது. பாருங்கள் துருக்கியின் கஷ்டகாலத்தில் இந்திய முஸ்லிம்கள் பணத்தாலும் மனித உதவியாலும் எவ்வளவோ உதவிசெய்தோம். கிலாபத்துக்காக படாதபாடுபட்டோம். ஆனால் நம்முடைய கஷ்டகாலத்தில் துருக்கியால் ஒருவித உதவியும் நமக்கு செய்ய முடியவில்லை. இந்திய அரசாங்கம் தான் நமக்கு செய்யவேண்டிய உதவி செய்யமுடியும். அந்நிய அரசாங்கமான பாகிஸ்தான் ஒன்றும் செய்ய முடியாதென்பதை இந்தியமுஸ்லிம்கள் நன்றாக உணரவேண்டும். நம்முடைய அரசாங்கம் பலமாக இருந்தால்தான் நம்மைக் காப்பாற்ற முடியும். ஆகையால் இனியாவது முஸ்லிம் சகோதரர்கள் இந்தியா கவர்மெண்டையும் மாகாண கவர்மெண்டையும் முழு மனதுடன் ஆதரிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். இந்துசகோதரர்களும் இந்நாட்டிலுள்ள $4\frac{1}{2}$-கோடி முஸ்லிம்களும் உலகம் இன்று இருக்கும் நிலைமையில் தேச பாதுகாப்புக்காக தேவை என்பதை உணர்ந்து அவர்களின் ஒத்துழைப்புடன் வேலைசெய்யவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கம்யூனிஸ்ட் சகோதரர்களுக்கு ஒரு வார்த்தை. பலாத்காரத்தினால் நீங்கள் இத்தேசத்தின் அரசாங்கத்தை கைப்பற்றிவிடலாமென்று நினைத்தால் அது பகற்கனவே யாகும். உங்கள் செய்கைகளால் பெண்கள்; குழந்தைகள் ஒரு பாவமுமறியாதவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டும், காயப்பட்டும், கொள்ளையிடப்பட்டும் கஷ்டப்படுகிறார்கள். அகில உலகமே மெச்சும்படியான ஓர் அரசாங்க சாசனத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். பொது ஜனங்களின் ஆதரவிருந்தால் நாளையே அரசாங்கத்தை கைப்பற்றிவிடலாம் ஆகையால் தாங்கள், தங்கள் கொள்கைகளி

விருந்து பலாத்காரத்தையும் அந்நியனை எதிர்பார்க்கும் விஷயத்தையும் விட்டு விட்டு நியாயமானமுறையில் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு உங்கள் கொள்கைகளை நீங்கள் தாராளமாக பொது ஜனங்கள் முன் எடுத்துச்சொல்லி அவர்களின் ஓட்டுகள் பெற்று அரசாங்கத்தை கைப்பற்றலாம். நம்முடைய சகோதரர்களையே வெட்டி துன்புறுத்துவதுப, சொள்ளையடிப்பதும் இந்திய தர்மத்திற்கும் சத்தியத்திற்கும் புறம்பானது,

சோஷலிஸ்ட் சகோதரர்களைப் பாருங்கள் அவர்களுடைய தேசபக்திக்கும் தியாகத்திற்கும் நாம் ஒவ்வொருவரும் வணங்கவேண்டும். காங்கிரஸ் கவர்மெண்ட் அதிகாரத்திற்கு வந்து 2½-வருஷங்கள் தான் ஆகிறது அதற்குள் அவர்கள் காங்கிரசிடம் 10. வருஷ வேலை எதிர்பார்க்கிறார்கள். அது காரியத்தில் முடியுமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். உலகத்தின் ஸ்திரமற்ற நிலைமை கஷ்மீர் தகராறு பாகிஸ்தான் தொல்லை, கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டங்களும், கொலைகளும், உணவு பற்றாக்குறை, மழையின்மை ஆகிய காரணங்களால் இடபொழுது செய்ததைவிட அதிகம் கவர்மெண்டால் செய்ய முடியவில்லை என்பது வாஸ்தவம். பண்டிதர் நேரு அவர்களும் படேல் அவர்களும் தங்கள் சிற்ப வேலையால் ஒருநாளில் இந்திரலோகத்தை இவ்விடம் சிருஷ்டி செய்துவிட முடியாது உலகம் இன்று போய்க்கொண்டிருக்கும் நிலைமையில் சோஷலிஸ்ட்கள் தங்கள் மாறுபட்ட அபிப்பிராயத்திற்கு உட்பட்டு காங்கிரஸ் கவர்மெண்டுடன் ஒத்துழைத்தால் தான் தேசத்தில் அமைதியும் ஒற்றுமையும் ஏற்பட்டு நம்முடைய கவர்மெண்ட் பலமடையும். கவர்மெண்ட் பலமடைந்தால் தான் வெளிதேசங்களிலும் உள் நாட்டிலும் அதிக பலம் கிடைக்கும்.

கடைசியாக இந்நாட்டிலும் விசேஷமாக தமிழ் நாட்டில் காங்கிரஸ்காரர்களிடம் ஒற்றுமை மிகவும் குறைந்துவிட்டது. தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் உடனடியாக இதை கவனிக்கவேண்டும். எந்த ஊருக்குப் போனாலும் காங்கிரஸ் காரர்களில் கட்சிகள் இருக்கின்றன. இதைக் களைந்தெரியவேண்டும். இந்த வித்தியாசங்களின்பேரில் தான் மாண்டு போய் ஆழமாக புதைக்கப்பட்டிருந்த கட்சியும் புதுப் பெயருடன் சில கட்சிகளும் புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கின்றன இப்பொழுது முதலே ஒவ்வொரு தாலுக்கா ஜில்லாவிலுள்ள காங்கிரஸ்காரர்கள் தங்கள் வித்தியாசங்களை விட்டு தேச நன்மையை மேலாக நினைத்து காங்கிரஸ்காரர்களுக்குள்ள குட்டி கட்சிகளையும் வித்தியாசங்களையும் மறந்து தேசத்திற்கு செய்யவேண்டிய கடமையைச் சரியாக செய்யவேண்டும். தனி மனிதனை விட காங்கிரஸ் பெரிது, ஆகையால் நமக்குள் வித்தியாசங்கள் இருந்தபோதிலும் காங்கிரசிடம் பூர்ண பக்திகொள்ளவேண்டும். முன் போல் அடிக்கடி காங்கிரஸ் பிரசாரம் எல்லா ஊர்களிலும் செய்வதுடன் இதுவரையில் காங்கிரஸ் சாதித்திருக்கும் நன்மைகளையும் விவரமாக எடுத்துச்சொல்ல வேண்டும் வகுப்பு அடிப்படையிலோ அல்லது ஜாதி அடிப்படையிலோ எவ்வித காங்கிரஸிலும் எவ்வளவு உபயோககரமானதாக இருந்தாலும் காங்கிரஸ் காரர்கள் அதில் சேரவும் கூடாது. அப்பேற்பட்ட சங்கங்கள் ஏற்படுவதற்கு உடந்தையாகவும் இருக்கக் கூடாது அதனால் எவ்வித தீமைகள் விளைகின்றன வென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஒரு காலத்தில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த அரும் பெரும் தலைவர் ஜனாப் மன்ருல்ஹக் என்னும் முஸ்லிம் தலைவர், நான் முதலில் இந்தியன் பிறகும் இந்தியன் கடைசியிலும் இந்தியனே தவிர வேறில்லை என்று சொன்னார். நம்முடைய மதச்சார்பற்ற அரசாங்கத்தில் இந்நாட்டிலுள்ள இந்துக்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள் பார்சீகள் எல்லோரும் இந்தியர்கள்தான். என்பதை நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும். சிலர் தங்கள் தங்கள் வகுப்புக்களுக்கு சலுகை கேட்கிறார்கள். இதனால் தேசத்திற்கு கெடுதலேயொழிய நன்மை கிடையாது ஒரு ஜாதியிலிருந்து அல்லது வகுப்பிலிருந்து ஒருவருக்கு உத்தியோகம் வந்துவிட்டால் பொது ஜனங்களுக்கு அதனால் நன்மை கிடைத்துவிடாது உதாரணமாக ஜனாப் பஷீர் ஆமத் ஸையத் அவர்கள் ஹைகோர்ட்டிலிருப்பதால் முஸ்லிம் பொது ஜனங்களுக்கு ஒரு நன்மையும் ஏற்பட்டுவிடாது. ஆகையால் வகுப்பு ஜாதிகளின் பேரால் அரசாங்கங்களில் உத்தியோகம் தேடுவதும் இத்தேசத்தில் வகுப்பு உணர்ச்சி வளர்ப்பதாகும். இதனால் திறமைக்கு இடமில்லாமல் போய்விடும். ஆகையால் காங்கிரஸ்காரர்கள் யாரும் வகுப்பு கிளர்ச்சிகளில் ஈடுபடாமல், தங்களுக்குள்ள வித்தியாசங்களை மறந்து தேச நலனையே பெரிதாகக் கருதி உழைத்தால் மகாத்மா காந்தி எதிர்பார்த்த ராமராஜ்யம் காரியத்தில் சாத்தியமாகலாம்.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும்,
விபரங்களுக்கும்
கீழ்காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்,

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை

மலர் 3 { 22—5—1950 திங்கட்கிழமை } இதழ் 4

சிறுபான்மைப் பாதுகாப்பு.

நல்ல அறிகுறிகள்.

ஏப்பிரல் 10வ முதல் இந்தியா - பாகிஸ்தான் ஒப்பந்தம் தோன்றச் செய்த நவீன அத்தியாயம் நினைத்ததற்கும் அதிக விசையுடன் முன்னேறி வருகிறது. மானிட செயலைவிட மானிட தத்துவார்த்தத்தின்மீது நிர்ணயமாகும் தீர்ப்புக்கள் என்றுமே நற்பலனை யளித்து வந்துள்ளன மானிடன் சுய அறிவெனும் வரப்பிரசாதத்தை தெரிவித்துவிடவில்லையாயின் அவற்றால் ஏற்படும் நற்பலனாகிய நேர்மையையும் உடையவனே வாழ்க்கையில் அறிவிழந்து, உணர்ச்சி வசமாகி மனித இயல்பை விட்டு விலங்கினைப்போல் காரியங்களையும் செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படக்கூடும் ஆனால் இது நீண்டநாள் இருக்கக்கூடியதல்ல. முடிவில் சுயமாகவோ, மற்றவரின் உதவியுடனோ, தவறான போக்கை விட்டு நேரான மார்க்கத்தில் முன்னேறிச்செல்வான் இது இயற்கை நியதி இல்லையாயின், தீர்க்கதரிசிகள் பாடுபட்டு விலக்கிய மானிட சாபக்கேடுகள் இன்றும் இருந்திருக்கும்.

சிறுபான்மை - அல்ல நேரு - லியாகத் ஒப்பந்தம் பிரிவினைக்குப் பின் நிகழ்ந்த துக்ககர சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டதால், மானிட இயல்பின் சீறியதன்மையின் விளைவேயாகும். இவ்வியல்பின் குறித்து எச்சமயம் இரு அபிப்பிராயங்கள் கொள்ள முடியாது ஆகவே தான் இவ்வொப்பந்தத்தை சில வெறிகளைத்தவிர யாரும் எதிர்க்கவில்லை. எதிர்க்கும் கண்கெட்ட மதியற்ற வெறியர்கள் வேறு வித உபாயங்களை கூற முடியாமல் தத்தளிக்கின்றனர். வெறும் சந்தேகத்தின்மீதே அவர்களும் எதிர்ப்பதாக கூறுகிறார். சந்தேகங்களை அஞ்சுபவர்கள் தன் நம்பிக்கையற்றவர்களும், சோதனைகளைக் கண்டு அஞ்சுபவர்களுமே.

ஒப்பந்தத்தை நிறைவேற்ற இரு சர்க்கார்களும் பெரும் அளவில் முயலுகின்றன. எதிர்பார்த்த அளவுக்குமேல் ஒப்பந்தம் பலனளித்துவருகிறது பாரத-பாக் கிடையே உள்ள எல்லா வேறுபாடுகளுக்கும் தக்க பரிகாரம் தேடி, அவற்றின் முன்னேற்றத்தைத் தடுக்கும் சக்திகளை களைந்தெரியும் நற்காரியத்தின் முதல் அடியே இவ்வொப்பந்தம் என்று கூறினார் பண்டித ஜவஹர் பண்டித நேருவின் தீர்க்க தரிசன மிக்க கூற்று உண்மையாகி வருகிறது கராச்சியில் செய்யப்பட்ட இந்திய - பாக், வர்த்தக ஒப்பந்தம் பண்டித நேருவின் கூற்றை உண்மைப்படுத்துகின்றன வர்த்தக ஒப்பந்தம் 1950 ஜுலை 31தேதி வரையே செய்யப்பட்டதாயின் கிரயத்தைச் செலுத்த வகுக்கப்பட்ட முறை இருசர்க்கார்களும் நேர்மையானமுறையில் நிலைமையை சீர் செய்ய பாடுபடுகின்றன என்று தெளிவாகக் காட்டுகின்றது. கராச்சியின் இவ்வொப்பந்தம் முதல் ஒப்பந்தத்தின் நேர்மையை வெளிப்படுத்தும் இரண்டாம் அடியே ஆகும். முதல் ஒப்பந்தம் குறித்து சிலர் வெளியிட்ட சந்தேகங்களை பொய் யென நிரூபிக்கும் விதத்தில் இரண்டாம் ஒப்பந்தம உள்ளது. நேருஜி - லியாகத் சந்திப்பு முன்னேற்ற பாதையில் சிதறிக்கிடக்கும் முட்கள் யாவற்றை இல்லையெனில் பெரும் அளவில் விலக்கிவிடும் என்று நம்புகிறோம். கலவரங்களின் விளைவாக சிறுபான்மையினர் அடைந்த பீதியும் பயமும் தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை என்றே நாம் கருதுகிறோம்

இந்தியா பொருத்தமட்டில் - ஒப்பந்தத்தை எவ்விதத்தில் அமுலாக்கி தீருவோம் என்ற பண்டித நேருவின் கூற்றும். - ஒப்பந்தத்தின் வெற்றி பாரதத்தின் நற்பெயருக்கு அத்தாட்சிபர்கும் என்று சர்தார் படேல் கூறுயதும் - பீதியை விட்டுவிடுங்கள் இனி சமாதானத்திற்கு எவ்வித அபாயமும ஏற்படாது. கவலைகள் இனி தலையெடுக்க முடியாது என்று நான் கூறும்போது என் பொருப்பையுணர்ந்து உறுதியளிக்கிறேன் என்ற மௌலானா ஆசாத்தின் கூற்றும், - விஷமிகளுக்கு பயங்கர தண்டனையளிக்கப்படும் என்று பண்டித வல்லப பந்த் கூறியதும்- இந்திய முஸ்லிம்கள் கவலையற்று நிம்மதியுடனிருக்கபோதுமானவைஎன்றே கருதுகிறோம்.

குற்றமற்ற இந்திய முஸ்லிம்களை விஷமிகள் தொல்லையளித்தனா என்பது உண்மையே; அவர்களை பாதுகாக்க சர்க்கார் தவறிவிட்டதென்பதும் மறுக்க முடியாத உண்மையே; பொருளாதாரத் துறையில் முஸ்லிம்கள் எந்தவித கொள்கையும் கொண்டிருக்கவில்லை என்பதும் உண்மை; இனியும் தொல்லைகளைப் பொருத்துக்கொண்டிருக்க அவர்களுக்கு சக்தியில்லை என்பதும் உண்மையே ஆனால் நிலைமை மாறவிடவில்லையா ? சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதலை நீங்கள் பார்க்கவில்லையா ? நீங்கள் நாட்டை விட்டு வெளியேற பீதியே காரணமென்றால் பெரும் தவறு இழைக்கிறீர்கள். நாட்டைவிட்டு வெளியேறியவர்

கள் இன்று படும் தொல்லையை நீங்கள் அறிவீர்கள். அவர்களது துக்ககர வாழ்க்கையும் நீங்கள்காண்கிறீர்கள் காட்டினர் அனைவரும் அவர்களுக்கு உதவிய போதிலும், சர்க்கார் தன் பூரண சக்தியுடன் அவர்களை புனர்வாழ்வளிக்கபாடுபட்டபோதிலும்,நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்னிருந்த சமாதான வாழ்க்கையின் மேன்மைகளை அவர்கள் அடைய முடியுமா ? வெறும் சந்தேகங்களால் நாட்டைவிட்டு வெளியேறுவது பெரும் தவருகும் முஸ்லிம்கள் நம் வேண்டுகோளை ஆராய்ந்து, பீதியடைந்துவெளியேற நினைத்தவர்களும் அவ் வெண்ணத்தை விட்டுவிடுவர் என்று நம்புகிறோம்.

ஹுமாயூனின்

சிறந்த பண்பாடு.

நமது நாட்டில் அக்காலே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருந்தார்கள் என்பதற்கு கீழ்வரும் கி. பி. 16-வது நூற்றாண்டின் சரித்திர சம்பவமே சான்று பகர்கின்றன.

கூர்ஜர நாட்டையாண்ட பஹதூர்ஷா என்பவன் (முன்னர் கூர்ஜரநாட்டை ஆண்ட முஹம்மதுஷாவின் பேரன்) கி. பி. 1534-ல் சித்தூரை முற்றுகையிட்டான். அப்பொழுது சித்தூர்ராணி ராணுசம்காராம் சிங்கின் மனைவி (விதவை) டில்லி சக்ரவர்த்தியாயிருந்த ஹுமாயூனின் உதவியை நாடினுள். ஹுமாயூனும் உடனே தமது படைகளைத திரட்டி " எனக்கென்ன வந்தபோதிலும், என் சகோதரி போன்ற சித்தூர் ராணியின் கீர்த்திக்குப் பங்கமேற்படப் பார்த்திருக்க மாட்டேன் " என்று சபதம் செய்து, உடனே சித்தூரை நோக்கி, பஹதூர்ஷாவை எதிர்க்க புறப்பட்டார். பஹதூர்ஷாவுக்கும், ஹுமாயூனுக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. இறுதியில் பஹதூர்ஷா தோல்வியடைந்து ஒட ஆரம்பித்தான் வெற்றிமாலை சூடிய ஹுமாயூன், தன்னை உதவிக்கு அழைத்தராணியிடம் அமைதி நிலவ கூர்ஜரத்தை ஒப்படைத்தார். ராணியும் மிக்க நன்றி தெரிவித்தார்.

இது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டன்றோ ? இன்று நாமும் அப்படிப்பினையை சிரமேற்கொண்டு ஒற்றுமையுடன் வாழ முனைவோமாக ! வாழ்க ஒற்றுமை !

ஏஜண்டுகளில்லாத நகரங்களுக்கு

— " ஆஸாத் " —

விற்பனை ஏஜண்டுகள் தேவை !

புத்தக விமர்சனம்.

—o—

[திருப்பள்ளியெழுச்சி ; திருவாவடுதுறை ஆதின வெளியீடு உரை எழுதியவர்: தஞ்சை, நீ. கந்தசாமி பிள்ளை]

பரம்பின் கால் பாம்பிற்குத் தெரியும் என்பது பழமொழி. உருவமில்லா கடவுளை உலகெங்கும் ஒருங்கே வியாபித்து ஒரு குடைக்கீழ் ஆட்சிசெய்யும் ஆண்டவனை,தாயும், தந்தையும் சுற்றமுமுற்றமுமான கொற்றவைக் கடவுளை நேரிற்கண்டு வீடுபெற்ற நால்வரைப் பெற்ற நாடு நம் நாடு ராமகிருஷ்ண பரமஹம்ஸரையும், ராமலிங்கரையும் அருணகிரியாரையும் சிவப்பிரகாசரையும் பெற்றெடுத்துப்போற்றி வளர்த்த இந்தியத்தாய், தம் மகனிவரை பிறர் 'சான்றோர் எனச் சொலக்கேட்டு, ஈன்ற பொழுதின்பெரிதுவந்தாள். பொன்விளையும் இப் பூமியில் தானே பொன்னையே ஒண்ணுது பற்றறுக்கும் பக்திமார்க்கமும் விளையும் !

படைப் பென்பது ஒரு கலை பிறப்பென்பது அதன் கிளை. படைப்புக் கலையில் ஒரு வேடிக்கை, பிடிப்புக கொள்கைதான்-தலைமுறை தலைமுறையாகப் பிறப்பெடுத்து, அலைவுற்ற போதிலுங்கூட, கலையுணர்ச்சி, பக்திச்சிந்தனை, இவைமட்டும, விடாப்பிடியாய் நம்மை வளைய வளைய வந்து கொண்டேதான் இருக்கும். ரத்தக்கலப்பு அப்படி ! அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், முதலிய சான்றோர் பலருடைய வழித் தோற்றங்களாகிய இன்றைய இந்தியருக்கு— குறிப்பாக தென்னிந்தியருக்கு - ஒரு ஈடுபாடு இருக்கத்தானே செய்யும், ' திருப்பள்ளியெழுச்சி ' போன்ற தெய்வத் திருப்பாக்களிலே.

இந்தப் புத்தகத்திலே குறிப்பிடத் தக்கது, நீ கந்தசாமிப்பிள்ளையவர்களின் உரைதான் இந்தவுரை தெள்ளிய முறையிலே, எளியநடையிலே, ஆங்காங்கே வேண்டிய அளவு வெளி இலக்கியத்து மேற்கோள்களுடன் சிறந்து விளங்குகிறது. பதவுரை; சிற்சில கடினமான சேர்க்கைப் பதங்களை உடைத்து, படிப்பவர் பொருள் விளங்கப்பெறுதற்கு உதவியாக இருக்கிறது. ஒவ்வொரு பாவும், (i) உரை நடைமுறை. (ii) பொருள் (iii) குறிப்பு என்ற தலைப்புகளின் மூலம் விளக்கம் பெறுகின்றது. மொத்தத்திலே போற்றற்குரிய வேலை.

அச்சுக்கோப்பிலே பிழைகளில்லை. அழகான பிரதிகள். அருமையான முயற்சி ஆகவே இதற்கு அண்மை வெற்றியும், உண்மையான வரவேற்பும் திண்ணமே.

வீ. வே

பாரதமும்—பாக்கிஸ்தானும்

வெற்றி மோகத்தில் அறிவிழந்தோர் தோல்வியே அடைவர். பிரயாணத்தினூடே இளைப்பாற தங்குமிடத்தை போகக் கருதிய இடமென எண்ணினால் பிரயாணம் வீண் தொல்லையே. நிலத்தில் விதைத்தவுடன் பலனை எதிர்பார்ப்பது அறிவீனமாகும். மேற்கூறிய உண்மைகளை தீர்க்கதிருஷ்டியற்றவரும் அறியாமலிரார். நாட்டின் விரும்பத்தகாத கவலையளிக்கும் சூழ்நிலையை ஒரேயடியாய் மாற்றியமைக்க, எண்ணற்ற தியாகங்கள் புரிந்து, சகிக்கவொண்ணாத துன்பங்களைச் சகித்து சுதந்திரமடைந்தோம். ஆனால்......... கடந்த இரண்டரை ஆண்டுகளில் நாம் எத்தனை வெற்றியடைந்தோம்? நாட்டின் நிலைமை எவ்வித மாறுதலடைந்தது? என்ற வினாக்களுக்கு பார்லிமெண்டு சபையிடம் விடை பெற எண்ணவேண்டாம். பாமரன் ஒருவனிடம் கேளுங்கள். நிச்சயமாக அவனளிக்கும் விடை பட்ஜட் கூட்டத்தில் சர்க்கார் தாப்பில் அளிக்கும் பதிலுக்கு முற்றிலும் எதிரிடையாகவேயிருக்கும். ஆயினும் நாம் அவனை எதிர்க்கமுடியாது. அவன் முற்றிலும் உண்மையே கூறுகிறான் என்பதை நம் மனச்சாட்சி சுட்டிக்காட்டும்.

உண்மையில் நாட்டின் நிலைமையை மாற்றியமைக்கும் சாதனங்களும், சந்தர்ப்பங்களும நம் உரிமையாவதே சுதந்திரம் என்பது. ஆகவே அரசியல் சுதந்திரம் பெற்றதும் அச்சாதனங்களையும் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொள்வது அவசியமாகும். இன்றேல் நாட்டின் சூழ்நிலையை மாற்றியமைக்க முடியாது. இத்தத்துவார்த்த உண்மையை ஒரு நாட்டுப்புறத்தான் அறிந்துகொள்ளமுடியாது........... சமீபத்தில் கையொப்பமிடப்பட்ட பாக்—இந்தியா ஒப்பந்தமும் இதைப் போன்றதே. பாக்—இந்திய வேறுபாடுகள் அனைத்தும் மறைந்துவிடும் என்று நினைப்பதும் முக்கிய பிரச்னைகள் அப்படியேயிருக்க ஒரு சில பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய இவ்வொப்பந்தம் வீணே என்று கருதுவதும் தவறாகும். மே. வங்க பிற்போக்குப் பத்திரிகைகள் ஒப்பந்தம் பிரயோஜனமற்றதென கூக்குரலிடுவதை நாம் அறிவோம்.

ஆகவே ஒப்பந்தத்தை அதன் எல்லைகளிலும், அதன் உண்மை நோக்கத்தையும் ஆராய்ந்தால் இதனால் பல பிரச்னைகள் சுமுகமான முறையில் தீர்க்கப்படுவதுடன் பல பெரும் பிரச்னைகளுக்கும் தக்க சூழ்நிலை ஏற்படுத்தக்கூடியது என்பதை அறியலாம். அவை தீர்க்கப்படாவிடில் பாரதமும், பாக்-கும் நிம்மதியுடன் முன்னேறமுடியாது. இதைத் தெளிவாய் எடுத்துக்கூறும் ஒப்பந்த ஷரத்து இ பிரிவு 8 கூறுவதாவது:— "இரு நாடுகளிடையே சில பிரதேச ஆக்கிரமிப்புக்கோ, அல்லது யுத்தப் பிரச்சாரத்திற்கோ அனுமதியளிக்கமாட்டா. அவ்வித பிரசாரம் செய்யும் தனி நபர்கள், ஸ்தாபனங்கள் முதலியவைமீது கடுமையான நடவடிக்கை உடனுக்குடன் எடுக்கப்படும்" மேற்கூறிய ஷரத்து பாக்—இந்திய நாடுகள் எந்த நிலைமையிலும் யுத்தம் மேற்கொள்ளாது; சமாதான முறையிலேயே எல்லா பிரச்னைகளையும் தீர்த்துகொள்ள உறுதியளிக்கின்றன —என்றே கூறுகிறது.

ஒப்பந்தம் நிறைவேறிய பின் இன்று வரை கிடைத்துள்ள செய்திகள் மத்தியசர்க்காரும் மாகாண அரசாங்கங்களும், ஒப்பந்தத்தின் அடிப்படைக் கொள்கையை அமுலாக்க சிறந்த முறையில் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன என்று நிச்சயமாய்த்தெரிகிறது. ஆகவே மற்ற பிரச்னைகளையும் சுமுகமான முறையில் தீர்க்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. வாய்க்கால், நீர்ப்பாசனம் அகதி சொத்து, காஷ்மீர் முதலியவை போன்ற பிரச்னைகள் தீரும் வரை இந்தியா—பாக் உறவு ஸ்திரமானதென கூறமுடியாது. வர்த்தக உறவு ஸ்தம்பிதம், நாணய மதிப்பினால் ஏற்பட்டுள்ளது. நிதி மந்திரி மத்தாய் தான் பதவி வகித்துவரும்வரை நாணய மதிப்பு ஒருபோதும் மாற்றியமைக்கப்படமாட்டாது என்று கூறுகிறார். பாக் நாணய மதிப்பு ஒருபோதும் குறைக்கப்படமாட்டாதென்கிறார்

சிறந்த தமிழ்
... தேசிய வாரப் பத்திரிகை ....
"ஆஸாத்"
பல்லாயிரம் வாசகர்களின் கருத்தைக் கவர்ந்த கொள்கைகள்!
சாதி, சமய, மத, பேதங்களற்ற தத்துவார்த்த அரசியல் போதனைகள்,
மாபெரும் தலைவர்களின் பூரண அனுதாபத்தையும் ஆசியையும் பெற்றுள்ளது.

சந்தா செலுத்தாத அன்பர்கள்
தங்கள் சந்தாவை உடனே
அனுப்பிவைக்கும்படி
.... கேட்டுக்கொள்கிறோம். ....

குலாம் முஹம்மத். ஆகவே வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டால் நாணய மதிப்புப் பிரச்னை கிளப்பப்படாமல் பண்டமாற்ற முறையை மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனை கூறுகிறோம். (இந்திய ரூபாய்க் கணக்கில் வர்த்தகம் செய்ய பாக் இணங்கிவிட்டதாக செய்தி கிடைத்துள்ளது சந்தோஷமளிக்கிறது.)

உலகில் பல நதிகள் இரண்டு மூன்று நாடுகளில் பாய்கின்றனவாதலால் வாய்க்கால் பாய்ச்சல், சர்வ தேசப்பிரச்னையாகும். உதாரணமாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் டான்யூப் நதியும், நைல் நதியால் சூடானும் எகிப்தும் ஒருங்கே வளம்பெறுவதை நாம் அறிவோம். ஒரு நாட்டில் உற்பத்தியாகும் நதியின் போக்கை மாற்றி மற்றொரு நாட்டில் அதைப்பாய விடாமல் தடுக்க ஒரு நாட்டுக்கு அதிகாரம் உண்டென்றால் உலகில் பல நாடுகளில் சிக்கல்கள் தோன்றக்கூடும். ஒரு நாட்டின் ஜீவநதியினின்றும் பல கால்வாய்கள் வெட்டி பிற நாடுகள் வளம்பெறுவதைத் தடுக்க அக்கால்வாய்களில் நீர் பாயவிடாமல் தடுத்தால் ஒரு சர்வதேசப்பிரச்னை எழக்கூடும். அதை மானிட பிரச்னை என்று கூறுவது பொருத்தமாகும். இந்தியநாட்டின் ஆத்ம போக்கு இப்பிரச்னையில் குறுக்கிட முடியாதென்றே நாம் கருதுகிறோம். இந்தியா பரோபகார சிந்தனை கொண்டது. ஆகவே நீர்ப்பாசன பிரச்னை சுலபமாகத் தீரக்கூடும்.

அகதிகள் சொத்துப் பிரச்னையும் இன்று சுலபமாய்த்தீரக் கூடியதே ஏனெனில் இந்தியா—பாக் ஒப்பந்தத்தின் (ஆ) பிரிவில் கூறப்பட்டுள்ள ஷரத்து குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்குமட்டுமின்றி, இரு நாடுகளிலும் பொதுவாய் அமுல் செய்யமுடியும்.

காஷ்மீர் பிரச்னை மிகவும் சிக்கலானதே. உண்மையில் இந்தியா—பாக் நேச உறவு அது தீர்க்கப்படுவதாலேயே ஸ்திரமாகக் கூடும். இப்பிரச்னையைத் தீர்க்க ஐ. நா. சபையார் ஆஸ்திரேலிய மாஜி நீதிபதி சர் ஓவன் டிக்ஸனை நியமித்து இந்தியா—பாக் ராணுவங்களை காஷ்மீரினின்றும் வெளியேற்ற உத்தரவிட்டுள்ளனர். அடுத்த வாரத்திற்குள் அவர் காஷ்மீர் சென்று தம் பொறுப்பை நிறைவேற்றுவர் என்று தெரிகிறது. இப்பிரச்னையையும் அன்னியரின் தலையீடின்றி, இந்தியா—பாக் நாடுகள் தங்களுக்குள் தீர்த்துக் கொண்டிருந்தால் வரவேற்கத் தக்கதாயிருக்கும். சர்வதேச அரங்கில் மூன்றும் சக்தியின் தலையீட்டால் விளைந்தவை, இனி விளையக்கூடியவற்றை விவரிக்கவேண்டிய அவசியமில்லை. காஷ்மீர் பிரச்னை மூன்று பிரிவுகளைக்கொண்டது (1) பொதுஜனவாக்கெடுப்பு (2) ஆஜாத் காஷ்மீர் (3) பிரிவினை.

உங்கள் வியாபரம் உயர்வடைய

ஆஸாத்

விளம்பரம் செய்யுங்கள்!

பொதுஜன வாக்கெடுப்பு பொருத்த மட்டில் யாரும் எதிர்க்கமுடியாது. இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர், ஆஜாத் காஷ்மீர், ஐ நா. சபை முதலிய பலரும் இதை ஆதரிக்கின்றனர். இதை வெற்றியடையச்செய்ய யாவரும் முயலுகின்றனர் ஆயினும் இம்முறை பாக்—இந்திய வருங்கால நல்லுறவைப் பெரும் அளவு பாதிக்கக்கூடும் என்று சந்தேகிக்கிறோம். ஏனெனில் பொதுஜன வாக்கெடுப்பில் இரு தரப்பாரும் செய்யும் பிரச்சாரத்தால் வகுப்புவாதப் பிணக்குக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிடும். அதனால் இருநாடுகளின் நேச உறவு பெரும் அளவு பாதகமடைந்துவிடும். பொதுஜன வாக்கெடுப்பு சுதந்திர சூழ்நிலை பாதகமானதென்றே நாம் நம்புகிறோம். காஷ்மீரை ஒரு சுதந்தர நாடாக ஏற்றுக் கொண்டால், வருங்காலத்தில் அதன் சுதந்தரத்திற்கு எவ்வித உத்திரவாதம் அளிக்கப்படுகிறது காஷ்மீர் தானே தன் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியாதென்பது நிச்சயம். ஆகவே சுதந்தர காஷ்மீர், இந்தியா—பாக் நாடுகளுக்கு பெரும் அபாயமாகவே முடியக்கூடும் ஆதலால் காஷ்மீரின் பூர்ண சுதந்தரத்தை இந்தியா—பாக் ஏற்றுக்கொள்ள முடியாதென்றே தோன்றுகிறது.

ஆகவே பிரிவினை ஒன்றே சரியான மார்க்கமாகத் தோன்றுகிறது. இதை இந்தியா—பாக் மட்டுமல்ல; காஷ்மீரும் ஆஜாத் காஷ்மீரும் எதிர்க்கின்றன ஆனால் காஷ்மீரப் பிரச்னை தீர இதைவிட நல்ல மார்க்கம் இருப்பதாய்த் தோன்றவில்லை பல்வேறு கலாச்சாரத்தைக்கொண்ட பல பாகங்களைக் கொண்டது காஷ்மீர். ஆகவே ஓர் பெரும் நாட்டுடன் அப்பாகங்கள் இணைக்கப்பட்டால் அதன் சூழ்நிலை ஒருபோதும் பாதகமடைய முடியாது. இந்தியா—பாக் நாடுகளின் சம்மதத்துடன் ஐ. நா. சபையார் காஷ்மீரத்தை மேற்கூறியவிதமே பிரித்துள்ளனர். இன்றுள்ளதைப் போன்றே பிரிவினை செய்யப்பட்டால் ஒரு கெடுதலுமில்லை என்றே கருதுகிறோம். அதனால் காஷ்மீர் பிரச்னை ஒரு முடிவுக்கு வரும் என்பது திண்ணம்.

செய்திகள்.

டால்மியா ஸிமெண்ட் தொழிலாளர் சங்கம்,
டால்மியாபுரம், **10-5-50.**

இன்று 10உ அன்று ம. பழனியாண்டி அவர்கள் தலைமையில் நடந்த தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் மாயவரம் நாராயணசாமி நாயுடு அவர்கள், அவர்க்கேயுரித்தான முறையில் அழகாகப்பேசுகையில் காசவேலை திட்டத்தில் முனைந்துள்ள கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு நல்லதொரு சவால்விடுத்தார். கூட்ட முடிவில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்:— 1. நமது கோரிக்கைகளைப் பற்றிய எல்லாவிதமான சமரசங்களும் தோல்வியடைந்துவிட்டதாலும், தொழில் கோர்ட்டுக்கு இப்பிரச்னையை அனுப்பாததாலும், ஒத்தி வைக்கப்பட்ட நமது போராட்டத்தை மீண்டும் தொடங்குவதென இக் கூட்டம் தீர்மானிக்கிறது. போராட்டத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தொழிலாளர் பகுதி பொறுப்பாளர் திரு R. வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் நடத்துவதெனவும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

2 வரும் 29—5—50 தேதியன்று தனது சுற்றுப்பிரயாண திட்டத்தின்படி, டால்மியா புரத்திற்கு திரு R. வெங்கட்ராமன் விஜயம்செய்வதால் அன்றோ, அதற்கு முன்போ ஒரு சமரச உடன்பாட்டிற்கு நிர்வாகம் வருமென இக்கூட்டம் எதிர்பார்க்கப் படுகிறது

3. தமிழ்நாட்டில் விவசாயிகளை ஒரு கட்டுப்பாடான தேசீய ஸ்தாபனத்தின் கீழ் கொண்டுவந்து அவர்களின் துயர்போக்க வழி வகுக்குமாறு தமிழ்நாடு காங்கிரஸ் காரியககமிட்டியை இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

4. கோவில் தர்மஸ்தாபன இடங்களில் பரம்பரையாக இருந்த வீடுகளை தற்போதுள்ள தர்மஸ்தாபன குத்தகைக்காரர்கள் பிரித்துக்கொண்டு வருவதினால் அதில் வசித்துவரும் விவசாய ஏழைத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதன்படி தஞ்சை விவசாய தொழிலாளர்களில் ஒருவரும் ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸ் சார்பாக வேறு தாலுக்காவில் நின்று 1200 ஓட்டுகள் அதிகம்பெற்று வெற்றியடைந்தவருமான ஸ்ரீ பிச்சை அவர்கள் வீட்டை பிரிக்க எத்தனிப்பதாலும், ஏற்கனவே பலவீடுகள் பிரிக்கப்பட்டுவிட்டதாலும், இன்றும் பல வீடுகள் பிரிக்கக்கூடிய நிலைமை ஏற்படும்போல் இருப்பதாலும் விவசாய தொழிலாளர்க்கிடையே பெரும் மனக்கசப்பு ஏற்பட்டு வருகிறது. சந்ததியை பரவாமலிருக்க உடனடியாக சர்க்கார் தலையிட்டு உடனடியாக தடுக்குமாறு இக்கூட்டம் நமது மாகாண சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

பிரபல திருமணம்

மதுரை தொ. சி. மதார் மைதீன் அவர்கள் குமாரரும், தொ சி நயினா முகம்மது அவர்கள் தர்மகர்த்தாவுமான, தொ சி ந ம சேகு அகமது பீர் முகம்மது முஸ்தபா அவர்களுக்கும், உத்தமபாளையம் ஜனாப் கொ. கா சாகுல் ஹமீது அவர்கள் புதல்வி உம்முஹபீபா பீபிக்கும், 3—5—50-ல் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. அவ்வமயம் உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் பல பல பெரும் பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். சென்னை மந்திரிகள் கனம் பெருமாள்சாமி ரெட்டியார், கனம் பக்தவத்ஸலம், P பரமேஸ்வரன், ஸ்ரீமான் N. M. R. சுப்பராமன், M. L. A. முதலியவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

சந்தாதார்கள் -

விளம்பரம் கொடுக்கும் அன்பர்கள்,

- ஏஜெண்டுகளுக்கு,

சீரிய சிந்தனைகள், உயரிய அரசியல் கருத்துக்களை அள்ளிக் கொடுப்பதில் நிகரற்று விளங்குவதைப் போலவே, "ஆஸாத்" எடுப்பாக கண்ணைக் கவரும் அமைப்புடன் வெளியிடப்பட வேண்டுமென்பது நம் அவா. சொந்தமாக ஒரு அச்சுக்கூடம் இல்லாமல் அவ்வித மாறுதல்கள் சாத்தியமில்லை. ஆகையால் அச்சுக்கூட ஏற்பாடுகள் பூர்த்தியாகும் வரை "ஆஸாத்" மாதமிருமுறைதான் தங்களை சந்திக்குமென்பதைதெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்,
"ஆஸாத்" கும்பகோணம்.

மக்களின் உள்ளத்தை மகிழ்விக்கும்
மனோரம்யமான பட்டு - நூல் ஜவுளி தினுசுகள்
சாயம், சரிகை
உறுதி, உழைப்பு
அழகு அமைந்தும்
ஒருங்கே
அமையப் பெற்று
சொந்தத் தறியில்
தயார்
செய்யப்பட்டு
உத்திரவாதத்துடன்
வியாபாரிகளுக்கும்
மற்றவர்களுக்கும்
நயமான
விலைக்கு
கிடைக்குமிடம்
"நியூ மதுராஸ் ஹால்"
ஜவுளி வியாபாரம் - பெரிய தெரு, கும்பகோணம்
பாரத் ஸ்டுடியோ

— எங்களிடம் —

பலவிதமான பேப்பர்கள், அக்கவுண்ட்புக்குகள், ஸ்கூல் மாணவர்களுக்கு வேண்டிய நோட்புக்குகள், பெப்பர்மிண்ட்கள், சோப்புகள் செண்டுகள், பேட்ரிலைட், பீங்கான், கண்ணாடிசாமான் வகைகள், பனியன்கள், சூட்கேஸ்கள், குடைகள் இன்னும் மற்ற ஷாப் சாமான்களும் கிடைக்கும்.

*

K. M. P. பக்கிரிசாமி பிள்ளை

ஜவுளி அண்டு ஜெனரல் மர்ச்செண்ட்,

கடைத்தெரு, — கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909.

தந்தி விலாசம்:—"கோகுல்"   டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். அண் கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு:—

மதறாஸ் & மன்னார்குடி.

சந்தனாதித் தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும்,
குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்றவை.

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள் — வாசனைப் பாக்கு

பல காய்கறி ஊறுகாய் — வாசனை சுண்ணாம்பு

ரோஜாப்பூ குல்கந்து — அரகஜா

முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

Printed by V. Jayaram at his Sri Rama (Power) Printing Works, 38, Sarangapani East Vadamboki St, Kmu
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam.